**நாள் 11.07.2023.**

**SC 301/2022 அசா1 சந்திரசேகர் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரித்தபோது நடு இரவில் 1.30 மணிக்கு அய்யம்பேட்டை GH சவக்கிடங்கில் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் வைத்து என் அப்பா கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக பிரேத விசாரணை செய்ததாக சொல்லவில்லை. என் வீட்டிற்கும் என் வயலுக்கும் இடையே 500 மீட்டர் தூரம் இருக்கும். செங்கல் கால்வாயும் வயல் அருகில் உள்ளது. என் அப்பா கிடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் இடையே 400 மீட்டர் தூரம் இருக்கும். நான் டுவீலரில் டீக்கேன் வைத்து தொழில் செய்வதை காலை 6.00 மணிக்கு ஆரம்பித்து மாலை வரை சுமார் 8.00 மணி வரை செய்வேன். சம்பவத்தன்றும் காலை 6.00 மணிக்கு கிளம்பினேன். அன்றும் என்றும்போல் 2 கி.மீ தூரத்திற்குள் போய் வந்தேன். அர்ஜுனனும் அவர் மனைவியும் பிரச்சனை என்று போன் செய்யும்போது நான் டீக்கேன் உடன் ஒரு 300 மீட்டர் தூரத்தில் இருந்தேன். என் அப்பாவிற்கு செல்போன் உள்ளது. அர்ஜுனன் போன் செய்யும்போது என் அப்பா எங்களுடைய வீட்டில் இருந்தார். என் அப்பாதான் முதலில் போனார். என் குழந்தைகளுக்கு 5 வயது 4 வயது இருக்கும். என் மனைவி வீட்டில்தான் இருந்தார். என் அப்பா கிடந்த இடத்திற்கு என் மனைவி வரவில்லை. நான் முதன்முதலாக பார்த்தது என் அப்பா கீழேகிடந்தபோதுதான் என்றால் சரிதான். அசா4 சாட்சி பிரபு என் சகோதரியின் கணவர். என் சகோதரியை சம்பவத்திற்கு 5 வருடங்களுக்கு முன்பு பிரபுவுக்கு திருமணம் செய்தோம். பிரபுவின் ஊர் மணலூர். எங்களுடைய வீட்டில் இருந்து அசா4 ன் வீடு 3 கி.மீ தூரம் இருக்கும். என் தங்கைக்கும் அவரது கணவருக்கும் நான் போன்செய்ததன் அடிப்படையில் வந்தார்கள் என்றால் சரிதான். என் தந்தைக்கு 70 வயது இருக்கும். என்னுடைய வீடு இருக்கும் பகுதி நெருக்கமாக வீடுகள் இருக்கும் பகுதி. அந்த இடத்தில் இருப்பவர்கள் அனைவரும் ஒரே வகுப்பை சேர்ந்தவர்கள் அனைவரும் உறவினர்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் பேச்சுவார்த்தை உண்டு. என் மீதும் என் அப்பா மீதும் கபிஸ்தலம் காவல்நிலையத்தில் ஒரு புகார் இருக்கிறது. அதில் வழக்கு பதிவு செய்து 2018 லிருந்து வழக்கு நடக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அந்த வருடமே எங்களுக்குள் சமாதானமாகி வழக்கு முடிவடைந்துவிட்டது. காவல்நிலையத்தில் வைத்துதான் அந்த வழக்கு சமாதானம் பேசினோம். நான் அவ்வாறு பொய்சொல்கின்றேன் என்றும் இன்றும் நீதிமன்றத்தில் அந்த வழக்கு நடந்து வருகின்றது என்று

சொன்னால் அதுபோல் எனக்கு எந்தஒரு தகவலும் வரவில்லை. 9629402494 என்பது என் அப்பாவின் செல்போன் எண். அந்த எண் என் அப்பா பெயரில் இருக்கிறது. அவ்வாறு பொய்சொல்கின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய செல்போன் எண்ணோ என் அப்பாவின் செல்போன் எண்ணோ அர்ஜுனனுக்கும் அவரது மனைவிக்கும் தெரியாது என்றால் சரியல்ல. அர்ஜுனனின் மகள் பெயர் அபிதா. அவருக்கு வயது 19 இருக்கும். அர்ஜுனனின் மகள் அவருடன்தான் இருக்கிறார். அவர்கள் மூவரும் எங்களுடைய செங்கல் கால்வாயில்தான் தங்கியிருக்கிறார்கள். எங்கள் வயலும் செங்கல் கால்வாயும் தனித்தனி இடம் என்றால் சரியல்ல. வயலில்தான் செங்கல் கால்வாய் அறுக்கின்றோம். எனக்கு புஷ்பவள்ளி போன் செய்தார். நான் அந்த இடத்திற்கு போகும்போது அர்ஜுனன், புஷ்பவள்ளி அவரது மகள் ஆகியோர் இருந்தார்கள். என் தந்தையை வெட்டிபோட்டுவிட்டதாக அர்ஜுனன், புஷ்பவள்ளி அவரது மகள் ஆகியோர் என்னிடம் சொன்னார்களா என்றால் சொன்னார்கள். கீழே கிடந்த என் அப்பாவை நான் தூக்கும்போது என் சட்டையில் என் கையில் இரத்தம் பட்டது. இரத்தம் பட்ட என் சட்டையை நான் போலிசாரிடம் கொடுக்கவில்லை. அசாஆ1ன் புகார் யாருடைய கையெழுத்தில் எழுதப்பட்டது என்றால் அங்கு புகார் எழுதுவதற்கு ஆள் இருந்தார்கள். அவர்கள் எழுதி கொடுத்தார்கள் நான் கையெழுத்து போட்டேன். புகாரை எழுதிய நபர் போலிஸ் ஸ்டேசனிலேயே இருந்தார். புகாரில் அதை எழுதிக்கொடுத்தவர் பெயர் இல்லை. அவர் எல்லோருக்கும் மனு எழுதுபவர். அவர் யார், அவர் பெயர் என்ன என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. புகாரை காவல்நிலையத்திற்கு வெளியே முன்புறமாக வைத்து எழுதினார். புகாரை எழுதிதந்தவர் என்னுடன் காவல்நிலையத்திற்கு வரவில்லை. நான் புகாரை ஆய்வாளரிடம் கொடுத்தேன். ஆய்வாளர் புகாரை யார் எழுதியது என்று என்னிடம் கேட்டார். ஆய்வாளரிடம் காவல்நிலையத்திற்கு வெளியில் இருந்த நபர் எழுதிக்கொடுத்ததாக நான் சொல்லவில்லை. நான் புகாரில் ஒரு கையெழுத்தும், FIR ல் ஒரு கையெழுத்தும் போட்டேன். நான் மருத்துவமனைக்கு போய்விட்டு காவல்நிலையத்திற்கு சென்றேன். என் அப்பா விழுந்து கிடந்த இடத்திலிருந்து அய்யம்பேட்டை GH 5 கி.மீ துாரத்தில் உள்ளது. GH க்கு அசா4 வந்தார். அய்யம்பேட்டை GH க்கும் கபிஸ்தலம் காவல்நிலையத்திற்கும் 12 கி.மீ துாரம் இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது என் சட்டையில்

இரத்தக்கறையுடன்தான் போனேன். அப்போது ஆய்வாளர் என்னிடம் அந்த சட்டையை கேட்கவில்லை. என் சட்டையில்இருந்த இரத்தம் என் அப்பாவின் இரத்தம் என்று சொல்லி ஆய்வாளரிடம் நான் கொடுக்கவில்லை. "எதிரிகள் என் பக்கத்து நிலத்துக்காரர்கள் அவர்களுக்கும் எனக்கும் பிரச்சனை அதனால் பஞ்சாயத்து வைத்தோம். எதிரிகள் கட்டுப்படவில்லை" என்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை. "இந்த விவரத்தை அர்ஜுனனனும் புஷ்பவள்ளியும் எனக்கும் என் அப்பாவிற்கும் போன் செய்து சொன்னார்கள்". என்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை. என் அப்பாவின் வலது பக்க நெற்றிப்பொட்டில் வெட்டினார் என்று புகாரில் சொல்லவில்லை விசாரணையின்போதுதான் சொன்னேன். மேற்சொன்ன விவரங்களை போலிசார் என்னை விசாரித்தபோதும் நான் சொல்லவில்லை என்றும் தற்போதுதான் முதன்முதலாக நீதிமன்றத்தில் சொல்கின்றேன் என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கையின் நகலை வாங்கி படித்து பார்த்தேன். மேற்சொன்ன மூன்று விவரங்களை போலிசாரிடம் வாய்மொழியாகத்தான் சொன்னேன் எழுதிதரவில்லை. நான் வாய்மொழியாக சொன்ன அந்த விவரங்களை முதல்தகவல்அறிக்கையில் ஏன் பதிவு செய்யவில்லை என ஆய்வாளரை கேட்கவில்லை பதட்டத்தில் இருந்தேன். "என் அப்பா முன்னால் போனார். நான் பின்னால் போனேன். அப்போது ராஜலெட்சுமி உன்னைத்தாண்டா எதிர்பார்த்து கொண்டிருந்தேன் தேவடியா மகனே சாவுடா நீ நீயிருந்தால் எங்களால் விவசாயம் செய்ய முடியாது உன்னை வெட்டிட்டு வந்தால்தான் வீட்டிற்கு வரமுடியும் என்று என் அம்மாசொல்லியிருக்கிறார் என்று சொல்லி" என்ற விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை. "நான் என் தங்கைகளுக்கும் மாப்பிள்ளைகளுக்கும் போன் செய்து என் அப்பாவை ரமேஷ் வெட்டி அவர் இறந்துவிட்டதாக தகவல் சொல்லிவிட்டு அங்கேயே இருந்தேன்" என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. "ஒழுங்கா இருடா தேவடியா மகனே உனக்கும் இதே கதிதான் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார்" என்று புகாரில் சொல்லவில்லை. பாபநாசம் கோர்ட்டில்தான் சொன்னேன். GH லிருந்து காவல்நிலையம் செல்லும்போது மணி 8.00 இருக்கும். என்னிடம் காட்டப்படும் வீடியோ பதிவில் நடந்துபோவது என்னுடைய அப்பா அவர் காயத்துடன் நடந்துபோகிறார். அவர் நடந்து போகும் இடம் பாலம். (எதிரிதரப்பு வழக்கறிஞர் தன்னிடம் உள்ள Tablet ல் இருந்த அந்த வீடியோ

பதிவை காண்பித்து கேட்கிறார்) அந்த வீடியோ பதிவில் தேதி 20.04.2022 நேரம் 18.17 என காட்டுகிறது. என்னிடம் காட்டப்படும் வீடியோ பதிவில் என் அப்பா பாலம் அருகே நடந்து வருகிறார் அவரது கையில் அரிவாள் உள்ளது. என் அப்பாவுடன் பேசிக்கொண்டிருக்கும் பையனும் பெண்ணும் யார் என்று எனக்கு தெரியாது. அந்த பையன்தான் என் அப்பா கையில் கட்டு கட்டுகிறார் என் அப்பா பாலத்தின் சைடில் உட்கார்ந்திருக்கிறார். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் எதிரி வயலை வாங்கவேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வீடியோவில் காட்டப்பட்டுள்ள பாலம் மண்ணியாறு பாலம். மண்ணியாறு பாலம் வேறு என்னுடைய வயல் வேறு. நான் முதல்விசாரணையில் சொன்னவாறு வெட்டுப்பட்டதாக சொல்லப்படும் நேரத்தில் நான் அங்கு இல்லை என்றும் டீக்கேன் வியாபாரம் செய்துகொண்டிருந்தேன் என்றும் தகவல் தெரிந்து நேரடியாக GH க்குத்தான் நான் சென்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அங்கு இல்லை என்பதால்தான் புகார், போலிசார் விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணையில் முரண்பட்டு சொல்லியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்ததற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஊரில் என் அப்பாவிற்கு நிறைய எதிரிகள் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. பாலத்தில் பஞ்சாயத்து ஆபிஸ் கேமரா இருக்கிறது. வீடியோ பதிவு உள்ள pendrive ஐ குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதால் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**நாள் 11.07.2023.**

**SC 301/2022 அசா4 சாட்சி பிரபு மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இறந்துபோன பிச்சையின் மருமகன். நான் போலிஸ் விசாரணையின்போது பிச்சையின் மருமகன் என்று சொல்லியிருக்கின்றேன். மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு தொழில் டிரைவர். நான் முன்விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சவாரி புத்தூரிலிருந்து பட்டுக்குடிக்கு சவாரி செய்தேன். நான் சவாரி செய்தபோது பார்ட்டி இருந்தார்கள். நான் சொல்லும் ராஜலெட்சுமி அம்மா பிச்சையை கொன்றுவிட்டு வரச்சொல்லி அவரது மகன் ரமேசிடம் சத்தம் போட்டுக்கொண்டிருந்த இடத்திற்கும் பிச்சை வெட்டுப்பட்டு கிடந்த இடத்திற்கும் 1 கி.மீ தூரம் என்று சொன்னால் சரியல்ல 1/2 கி.மீ தூரம் இருக்கும். நான் பயணியுடன் காரில் சென்றுகொண்டிருந்தபோதுதான் ராஜலட்சுமி சத்தம் போட்டுக்கொண்டிருந்ததை கேட்டேன். அவ்வாறு கேட்டுவிட்டு சவாரியுடன் நான் போய்விட்டேன். "20.04.2022 அன்று மாலை 5.30 மணியளவில் பட்டுக்குடி மெயின்ரோடு வழியாக சென்றுகொண்டிருந்தபோது ராஜலட்சுமி அம்மா பிச்சையை கொன்றுவிட்டு வரச்சொல்லி அவரது மகன் ரமேசிடம் சத்தம் போட்டு கொண்டு இருந்தார்" என்பதை போலிசார் சொல்லி சொல்கின்றேன் என்றால் சரியல்ல. அதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் நடைபெற்றதாக சொல்லும் நேரத்தில் நான் அங்கு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.